மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற ஜனத் தொகையை கணக்கில் இட்டு வேடசந்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தின்கீழ் குடகனாறு அணையி லிருந்து தண்ணீர் வேண்டுமெனப் பொதுப்பணித்துறையை குடி நீர் வாரியத்தின் அலுவலகத்தின் சார்பாக கோரிக்கை விடுத் திருக்கிறோம். அந்த கோரிக்கைக்கு அனுமதி அளித்தவுடன் அது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 53. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

53—

வைகை ஆற்றில் சாக்கடை நீர் கலத்தல்.

*2253—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர் பெறப்படும் வைகை ஆற்றில் பரமக்குடி நகராட்சிப் பகுதிகளில் சாக்கடை நீர் கலப்பது அரசின் கவனத் திற்கு வந்துள்ளதா ?

(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம், வந்துள்ளது.

(ஆ) வைகை ஆற்றின் கரையை ஒட்டி 5 கி.மீ. நீளத்திற்கு தடுப்பு சுவர் கட்டுவது குறித்து தமிழ்நாடு குடிநீர் வாரியத்திடம் திட்டம் தயாரிக்க கோரிக்கை விடப்பட்டுள்ளது. அது விரைவில் முடிக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 10-20

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி 72,000 ஜனத்தொகையைக் கொண்ட பெரிய நகராட்சியாகும். இந்த 72,000 ஜனத்தொகை மட்டுமின்றி இளையாங்குடி போன்ற நகர்களுக்கும் பரமக்குடி நகராட்சிப் பகுதியிலிருந்துதான் குடிதண்ணீர் பெறப்படுகின்றது. அவ் வாறு இருக்கும்போது ஒப்பன் டிரெய்னேஜ் சரியாக இயங்காத காரணத்தாலும் முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜ்

1992 பிப்ரவரி 5]

காலத்திலேயே நிறைவேற்றப்பட இருந்த பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாத காரணத்தினாலும் பரமக்குடி நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக எஸ். எஸ். கோவில், முத்தானந்தம் பள்ளித்துறை.........
....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரராஜ் கேள்விக்கு வரவேண்டும். நீங்கள் பெருந்தலைவர் காலத்திலிருந்து கேள்வி நேரத்தில் பேசுவது சரியாக வராது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: போன்ற பகுதிகளில் சாக்கடை ஆற்றில் கலப்பதினால் ஆற்றிலிருந்து குடிநீர் பெறப்படும் இடங்களில் காலரா, மஞ்சள் காமாலை போன்ற வியாதிகள் பரவுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே, நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு, மருத்துவ நலத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற இந்தக் காலத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து சாக்கடை, ஆற்றில் குடிநீர் பெறப்படும் இடங்களில் கலக்காமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்த பரமக்குடி நகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தொகை 1 இலட்சத்திற்கும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைப்பதற்கு அரசால் இயலாது என்ற நிலையில் வைகை ஆற்றில் கரையை ஒட்டி சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் திட்டம் தயாரிக்கும்படி கோரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கழிவுநீர் வைகை ஆற்றிற்குச் செல்கிற வாய்ப்பு இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் இதன்மூலம் தீர்க்கப்படும் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 54, டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

54—

கன்னியாகுமரியில் மாவட்ட கூட்டுறவு வங்கி கிளை.

*3114)—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: